# பாலியல் வன்கொடுமை




**முனைவர். பாக்கியலஷ்மி. ச**

**M.A., M.ED., M.PHIL (TAMIL)., M.PHIL (EDUCATION).,**

**M.A. (SOCIOLOGY)., PH.D (TAMIL)., NET(TAMIL)**

**ஸ்டெல்லா மாட்டுடினா கல்வியியல் கல்லூரி**

**அசோக் நகர், சென்னை**

## முன்னுரை

பாலியல் வன்முறை எனப்படுவது பாலியல் வன்புணர்வு, பாலியல் நோக்குடன் அடிமைப்படுத்துதல்,கட்டாய பாலியல் தொழில், வலிந்து கர்ப்பமாக்குதல்,கட்டாய இனவிருத்தியை மேற்கொள்ளல், பாலியல் சார்ந்த கேலி, மிரட்டல், கட்டாய கருக்கலைப்பு என பல வகை குற்றங்கள் அடங்கும். ஒரு பெண் அல்லது ஆண், குடும்பம் விரும்பாத ஒருவருடன் காதல் அல்லது உடலுறவு கொண்டார் என்பதும் வன்முறைக்கு உட்படுத்துவதும் ஒருவகை பாலியல் வன்முறையே.

## குழந்தை பாலியல் வன்முறை:

**தவறான நம்பிக்கைகளும் உண்மைகளும்**

**தவறான நம்பிக்கை: குழந்தை பாலியல் வன்முறை பெண் குழந்தைகளுக்குமட்டுமே திகழ்கிறது.**

**உண்மை**: ஒரு குழந்தை துன்புறுத்தலுக்கு உள்ளாகிறது என்பதில் பாலினம் எந்த பங்கும் கொண்டிருக்கவில்லை. **இந்தியாவில் குழந்தைகள் துன்புறுத்தல் மீதான ஆய்வு,** பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் 2007 இல் நடத்தப்பட்டது, அதில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வடிவிலான பாலியல் துன்புறுத்தலை எதிர்கொள்ளும் குழந்தைகளில் 52.94 சதவீதத்தினர் ஆண்கள் என கண்டறியப்பட்டது.

**தவறான நம்பிக்கை: எனது குழந்தை துன்புறுத்தப்படாது.நான் அவர்களை புதியவர்களின் கவனத்தில் விடாமல் கவனமாக பாதுகாப்பேன்**.

**உண்மை**:பல நிகழ்வுகளில், குழந்தைகள் நன்கு அறிந்தவர்களால்- பாதிக்கப்படுகிறார்கள் குழந்தை மற்றும் அவர்களுடைய பெற்றோர் நன்கு அறிந்த மற்றும் நம்பும் நபர்கள். முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்று, 50% துன்புறுத்துபவர்கள் ஒன்றுவிட்ட சகோதரர்கள், மாமாக்கள், நண்பர்கள் மற்றும் வகுப்புத் தோழர்கள் ஆவர்.

**தவறான நம்பிக்கை:அது குறைந்த வருவாய் உடைய குடும்பங்களில் மட்டும் நிகழ்கிறது. நான் துன்புறுத்தலுக்கு உள்ளான யாரையும் அறிந்திருக்கவில்லை என்று நினைக்கிறேன்.**

**உண்மை**: பாலியல் வன்முறை குழந்தையின் மன நலனின் நீண்ட கால பாதிப்புகளை கொண்டிருக்கலாம். குழந்தை பாலியல் வன்முறையின் உடனடித் தாக்கம், ஒதுக்கம், பயம், அல்லது சில நிகழ்வுகளில் கோபம் ஆகியவையாக இருக்கலாம்.




## பாலியல் முறைகேடு

பாலியல் முறைகேடு என்பது பாலியல் துன்புறுத்தல் என்று அழைக்கப்படுகிறது. இம்முறை கேடு ஒருவரின் தவறான பாலியல் நடத்தையை மற்றவர்களின் மீது செயல்படுத்துவதாகும். இம்முறைகேடு, வற்புறுத்துதலாலும், மற்றவரை சாதகமாக்கியும் செயல்படுத்துவதாகும்.பாலியல் முறைகேடு விரைவாகவும் குறுகிய காலத்திலும் நடைபெறுகிறது. பாலியல் முறைகேடு செய்பவர் அல்லது துன்புறுத்துபவர் குற்றவாளி என்று அடையாளப்படுத்தப்படுகிறது. பாலியல் முறைகேடு என்னும் சொல் குழந்தை அல்லது வயது வந்த இளம் பருவத்தினரிடம் பாலியல் சம்பந்தப்பட்ட தூண்டுதலையும், நடத்தையும் குறிக்கும்.

## கணவர்கள்:

திருமண பாலியல் முறைகேடு என்பது வீட்டில் நடக்கும் வன்முறையின் ஒரு வடிவமாகும்.ஒரு பெண்ணின் கணவர் அல்லது முன்னாள் கணவரால் தேவையற்ற பாலியல் தொல்லைகள் அல்லது கட்டாய பாலியல் அச்சுறுத்தல்களை உள்ளடக்கியதாகும்.

## குழந்தைகள்:

சிறுவர் பாலியல் முறைகேடு என்பது, சிறுவர் வன்முறையில் ஒரு வடிவமாகும். வயது வந்தோர் அல்லது வயதான இளம் பருவத்தினர் பாலியல் திருப்திக்காக ஒரு குழந்தையை வன்முறைக்கு உட்படுத்தப்படுவதாகும். நேரடி பாலியல் தொடர்புக்கு வயது வந்தோர் அல்லது வயதானவர்கள் தங்கள் சொந்த பாலியல் ஆசைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் செயல்படுவதாகும். இதில் குழந்தையை மிரட்டுவது, திருமணம் செய்வது அல்லது அழுத்தம் கொடுப்பது போன்ற நோக்கத்துடன் செயல்படுவதாகும்.குழந்தைக்கு ஆபாச காட்சிகளை காண்பித்தல், அல்லது குழந்தையை பயன்படுத்தி சிறுவர் ஆபாசங்களை தயாரித்து போன்ற செயல்களும்,இக்கொடுமைகளாகும்.



ஒரு குடும்ப உறுப்பினரால் பாலியல் முறைகேடு என்பது ஒரு வகையான தகாப்பு பாலுறவு ஆகும். இந்த தகவல் உறவு தீவிரமான மற்றும் நீண்ட கால உளவியல் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இதனால் பெற்றோர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

**பாலியல் துன்புறுத்தல்:**




பாலியல் துன்புறுத்தல் என்பது வெளிப்படையான அல்லது மறைமுகமான பாலியல் செயல்களை உள்ளடக்கிய ஒரு வகை துன்புறுத்தல் ஆகும்.பாலியல் துன்புறுத்தல் வாய்மொழி மீறல்கள் முதல் பாலியல் முறைகேடு அல்லது தாக்குதல் வரை பல செயல்களை உள்ளடக்கியதாகும். பணியிடம், வீடு, பள்ளி, தேவாலயங்கள் போன்ற பல்வேறு சமூக அமைப்புகளில் தொல்லைகள் ஏற்படலாம்.

பெரும்பாலான நவீன சட்டசூழல்களில், பாலியல் துன்புறுத்தல் என்பது சட்டவிரோதமானதாக் கருதப்படுகிறது. பாலியல் தொல்லைகள் என்பதனைப் பொறுத்தவரை பொதுவாக சிறிய கிண்டல்கள், வெளிப்படையான கருத்துக்கள் அல்லது தனிமையில் இருக்கும் சமயத்தில் எல்லை மீறாத சம்பவங்கள் ஆகியன இதில் வராது.

பணி செய்யும் இடத்தில் ஒரு முதலாளியால் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் என்பது சட்டவிரோத வேலைவாய்ப்பு பாகுபாடு ஆகும். பல வணிகங்கள் அல்லது நிறுவனங்களுக்கு பாலியல் துன்புறுத்தல்களை தடுப்பது மற்றும் பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளிலிருந்து ஊழியர்களை பாதுகாப்பது சட்டம் முடிவெடுப்பது ஆகியன தற்போது முக்கிய இலக்குகளாக மாறி உள்ளன.

## சூழ்நிலைகள்

பணியிடம், வீடு, பள்ளி, தேவாலயங்கள் போன்ற பல்வேறு சமூக அமைப்புகளில் தொல்லைகள் ஏற்படலாம். குற்றவாளி வாடிக்கையாளர்கள், சகப் பணியாளர்கள், பெற்றோர் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர், உறவினர், ஆசிரியர் அல்லது பேராசிரியர், மாணவர், நண்பர் அல்லது அன்னியன் என யாராகவும் இருக்கலாம். அதற்கு சாட்சிகள் இருக்கும் சமயங்களிலும், இல்லாத சமயங்களிலும் பாலியல் தொல்லைகளும் ஏற்படலாம் .குற்றவாளி தனது நடத்தை அல்லது பாலில் துன்புறுத்தலுக்கு உள்ளாகப்படுவதை முற்றிலும் அறியாமல் இருக்கலாம். குற்றவாளி எதிர் பாலினமாக இருக்க வேண்டியதில்லை இந்த சம்பவம் குற்றவாளி மற்றும் அல்லது பாதிக்கப்பட்டவரின் தவறான புரிதலால் எழலாம். இந்த தவறான புரிதல்கள் நியாயமானதாகவோ அல்லது நியாயமாற்றதாகவோ இருக்கலாம்.

## இணைய மிரட்டல்

இணைய மிரட்டல் அல்லது இணைய தொல்லை என்பது மின்னணு வழிகளை பயன்படுத்தி மிரட்டுதல் அல்லது துன்புறுத்துதல்.சைபர் புல்லிங் மற்றும் சைபர் ஹாராஸ்மென்ட் ஆகியவை ஆன்லைன் மிரட்டல் என்று அழைக்கப்படுகின்றன. டிஜிட்டல் கோலம் விரிவடைந்து தொழில்நுட்பம் முன்னேறி வருவதால், குறிப்பாக இளைஞர்களுக்கிடையே இது மிகவும் பொதுவானதாகிவிட்டது

சைபர் புல்லிங் என்பது, பொதுவாக ஒரு இளைஞன், இணையம் மற்றும் பிற டிஜிட்டல் இடைவெளிகளில், குறிப்பாக சமூக ஊடக தளங்களில் மற்றவர்களை கொடுமைப்படுத்துவது அல்லது துன்புறுத்துவது.தீங்கு விளைவிக்கும் கொடுமைப்படுத்துதல் நடத்தையில் வதந்திகள்,அச்சுறுத்தல்கள்,பாலியல் கருத்துக்கள், பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட தகவல்கள் ஆகியவை அடங்கும் அல்லது இழிவான லேபில்கள் (அதாவது வெறுப்பு பேச்சு). கொடுமைப்படுத்துதல் அல்லது துன்புறுத்தல் மீண்டும் மீண்டும் நடத்தை மற்றும் தீங்கு விளைவிக்கும் நோக்கத்தால் அடையாளம் காணப்படலாம். பாதிக்கப்பட்டவர்கள் குறைந்த சுயமரியாதை, அதிகரித்த தற்கொலை எண்ணம் மற்றும் பல்வேறு எதிர்மறை உணர்ச்சிப்பூர்வமான பதில்களை அனுபவிக்கலாம், இதில் கவலை, விரக்தி, கோபம் அல்லது மனச்சோர்வு ஆகியவை அடங்கும்.

இணைய மிரட்டல் என்பது பல சந்தர்ப்பங்களில் ஏற்கனவே இருக்கும் பாரம்பரிய கொடுமைப்படுத்துதலின் நீடிப்பாகும். இன்டர்நெட் மூலம் கொடுமைப்படுத்தப்படும் மாணவர்கள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பிற பாரம்பரிய வழிகளிலும்(எடுத்துக்காட்டு உடல் ரீதியாக அல்லது வாய்மொழியாக) கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர். இணையத்தின் பிரத்தியேகமான கொடுமைப்படுத்தப்படும் மாணவர்கள் சிலரே; இந்த சைபர் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் உடல் ரீதியாக வலிமையான மாணவர்களாக உள்ளனர், இதனால் கொடுமைப்படுத்துபவர்கள் பள்ளியில் நேருக்கு நேர் தொடர்பு கொள்வதை விட ஆன்லைன் மூலம் தொடர்பு கொள்ள விரும்புகின்றனர்.



## பள்ளி சூழ்நிலையில் பாலியல் கலாச்சாரம்

சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு)சட்டம், 2015 படி, குழந்தைகளுக்கு அருகாமையில் இருந்து, தேவைப்படும் கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதில் எந்த ஒரு பள்ளி, நிறுவனம் அல்லது தனி நபர்கள் ஈடுபட்டுள்ளனரோ,அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொறுப்புணர்வு மற்றும் சொந்த பொறுப்பு ஏற்க வேண்டும் என கூறுகிறது.

பள்ளி வளாகத்திற்குள், பள்ளி பேருந்தில், ஆன்லைன் அமர்வுகளின் போது அல்லது மாணவர்களுடன் பள்ளி ஊழியர்களின் எந்த ஒரு ஈடுப்பாட்டிலும், மாணவ மாணவிகளின் பாதுகாப்பு மீறப்பட்டால், பள்ளிகள், நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் அதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும்.

## பள்ளிகளில் குழந்தைகள் பாதுகாப்பு கொள்கை

பள்ளிகளில், குழந்தைகள் பாதுகாப்பு கொள்கை அவசியம் என்பதை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அறிந்து கொள்ள வேண்டும். பள்ளி வளாகம் மட்டுமல்லாமல், பள்ளி பேருந்து மற்றும் தற்போதைய சூழலில் ஆன்லைன் வகுப்புகள் போதும், பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பள்ளியும் ஒரு மாணவர் ஆலோசகரை நியமிக்க வேண்டும், மாணவர்கள் எளிதாக அணுகும் வகையிலும் ரகசியத்தை பராமரிப்பதற்கான உத்தரவாதமும் உறுதி செய்ய வேண்டும்.

பள்ளிகளில் குறை தீர்க்கும் குழு மற்றும் புகார் பெட்டிகள் இருக்க வேண்டும். பெறப்பட்ட புகார்கள் மற்றும் ஒவ்வொரு புகாருக்கும் எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பதிவுகளையும் பள்ளிகள் உருவாக்க வேண்டும்.

அனைத்து பள்ளிகளும் நிறுவனங்களும் பாலியல் துன்புறுத்தல் மற்றும் பிற முறைகேடுகள் நடப்பதை தடுக்க முழு ஆவணங்களுடன் வலுவான நெறிமுறையை கொண்டிருக்க வேண்டும்.




## வலுவான நெறிமுறைகளின் பயன்கள்

- சந்தர்ப்பவாத குற்றங்களைத் தடுக்கலாம்.
- நெறிமுறைகளை பின்பற்றாதவர்கள் எளிதாக அடையாளம் காணப்பட்டு குற்றங்கள் நடக்காமல் தடுக்கலாம். ஆரம்பக் கட்டத்திலேயே இது போன்ற நடவடிக்கைகளை பள்ளிகள் அறிந்து, மேலும் தடுக்க, இந்த நெறிமுறைகள் உதவும்.
- ஒரு வலுவான நெறிமுறை குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை குறைக்கிறது மற்றும் அத்தகையவர்களின் சீர்படுத்தலை அடையாளம் காண உதவுகிறது.

## பள்ளிகளுக்கும் மட்டுமல்ல

பயிற்சி நிறுவனங்கள், விளையாட்டு அகாடமிகள்,நடனம், இசை மற்றும் கலை பள்ளிகள், குழந்தைகளின் நிகழ்ச்சிகளை வழங்கும் தொலைக்காட்சி மற்றும் பிற ஊடக சேனல்கள் ஆகியவற்றிலும் இந்த நடைமுறை கொண்டு வரப்பட வேண்டும்.குழந்தைகள் பாதுகாப்பு குறைபாடு பாலியல் தொல்லைகள் அல்லது துன்புறுத்தல் ஆகியவை



உடனடியாக கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட இது உதவுவதோடு, பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் நம்பகத் தன்மையும் பாதுகாக்கப்படும்.

1. வெளிப்படையாக உடல் உறுப்புகளை காண்பிப்பது, கடுமையான பேசுவது அல்லது நடந்து கொள்வது போன்ற பாலியல் அத்துமீறல், பள்ளியிலோ அல்லது ஆன்லைன் கல்வியின் போது நிகழ்ந்தால் முதல் படியாக,பெற்றோர்கள், வகுப்பு ஆசிரியர் அல்லது தனக்கு பிடித்தமான ஆசிரியர் என நம்பிக்கைக்குரியவர்களிடம் முதலில் தெரிவிக்க வேண்டும்.
2. இவர்கள் உடனடியாக பள்ளி நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.
3. பள்ளிநிர்வாகிகள், ஆலோசகர் மற்றும் சட்ட வல்லுநர் ஆகியோர் முன்னிலையில், நம்பிக்கையான பெரியவர் உடன் குழந்தையிடம் பேச வேண்டும். மேலும் குழந்தை என்ன சொல்கிறார் என்பதை பரிந்துரை அல்லது தீர்ப்பளிக்காமல் தெளிவாக அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

## பாலியல் தொல்லை /துன்புறுத்தல்: கவனிக்க வேண்டிய அறிகுறிகள்

- ஒரு ஆசிரியரால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும்போது குழப்பமும் அதிர்ச்சியும் ஏற்படும்.
- “என்னுடைய நடவடிக்கையால் இந்த மாதிரி நடந்துள்ளதா?” என்ற குற்ற உணர்ச்சியும் அவமானமும் ஏற்படும்.
- நம்பிக்கையான பெரியவர்களிடம் ஒளிவு மறைவின்றி பேச குழந்தை நேரம் எடுத்துக்கொள்ளும்.



## பாலியல் வன்கொடுமை குறித்த விழிப்புணர்வு:

பாலியல் வன்கொடுமை, தொந்தரவு, சீண்டல்கள் உள்ளிட்டவை குறித்து குழந்தைகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், அது தொடர்பாக வீடியோக்கள், கையேடுகள் அடங்கிய பெட்டகம் ஒன்று தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் தயாரித்துள்ளது.

கான்பூர் இந்தியத் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் (ஐஐடி) உதவியுடன் இந்த பெட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் சீண்டல்களும், வன்கொடுமைகளும் அதிகரித்து வருகின்றன. இதை தடுக்கும் நோக்கில், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் (போக்சோ) மத்திய அரசு அண்மையில் திருத்தங்கள் கொண்டுவந்தது. அதன்படி, குழந்தைகளைப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்குபவர்களுக்கும் அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்க வழிவகை செய்யப்பட்டது.



இந்நிலையில், பாலியல் சீண்டல்கள், தொந்தரவுகள் குறித்த விழிப்புணர்வு பள்ளி குழந்தைகளுக்கு ஏற்படுத்தும் வகையில் பெட்டகம் ஒன்றே தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் தயாரித்துள்ளது.

பாலியல் தொந்தரவுகள் குறித்த அடிப்படை விழிப்புணர்வு இல்லாது குழந்தைகளே, இதுபோன்ற இன்னல்களுக்கு பெரும்பாலும் ஆளாகின்றனர். அவர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவது சில சமயங்களில் அந்த குழந்தைகளுக்கே தெரிவதில்லை.

வகுப்பு ஆசிரியர்களோ அல்லது அரசு சாரா தொண்டு நிறுவனங்களோ, இந்தப் பெட்டகத்தின் உதவியுடன் சிறப்பு பயிற்சி வகுப்பு மூலம் குழந்தைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். 8



முதல் 12 வயதுக்குள்பட்ட குழந்தைகள் பலனடையும் வகையில், பல்வேறு விளையாட்டுகளுடன் கூடிய கற்றல் முறையின் அடிப்படையில் இந்த சிறப்பு பயிற்சி வகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறப்பு பயிற்சி வகுப்பு வாயிலாக உடல் சார்ந்த மற்றும் மனவியல் சார்ந்த பாலியல் சீண்டல்கள் தொந்தரவுகள் குறித்து விழிப்புணர்வை குழந்தைகள் எளிதில் பெற முடியும்.

## முடிவுரை

பாலியல் துன்புறுத்தல் ஒரு தீவிரமான மற்றும் பரவலான பிரச்சனையாக அனைத்து தொழில் துறைகளிலும் மற்றும் பணியிடங்களிலும் உள்ளது என்பதை காட்டுகிறது. எந்த ஒரு துறையும் பாலியல் துன்புறுத்தல்களால் தீண்டப்படாமலும், அதன் தாக்கங்களால் பாதிக்கப்படாமலும் இருப்பதை கண்டறிந்தோம்:பாலியல் துன்புறுத்தல் எண்ணற்ற பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை, உடல்நலம், நிதி சுதந்திரம் மற்றும் வாய்ப்புகளை சேதப்படுத்துகிறது.

## அடிக் குறிப்புகள்


1. மீனாட்சிசுந்தரம், அ. (2016)

   பாலினம், பள்ளி மற்றும் சமுதாயம், காவ்யமாலா பப்ளிஷர்ஸ்

2. நாகராஜன்,கி. (2016)

   பாலினம், பள்ளி மற்றும் சமூகம், ஸ்ரீராம் பதிப்பகம்

3. செல்வம், P. (2016)
   பாலினம், பள்ளி மற்றும் சமுதாயம், சம்யுக்தா பதிப்பகம்

4. பெரியண்ணன், கோ. (2016)
   பாலினம், பள்ளி மற்றும் சமுதாயம், வனிதா பதிப்பகம்

5. மோகன், N. & கமலக்கண்ணன், R. (2016) சமூகப்பாலினம், பள்ளி மற்றும் சமுதாயம், திருவள்ளுவர் பதிப்பகம்